உ

சற் குருப்யோ நம:

திருப் பேரை யூர்

ஸ்ரீ சாந்த லிங்க சுவாமிகள்

அருளிச் செய்த

வைராக்ய தீபம்

இது

திருப் பூவண மடாதிபதி

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய

சுவாமிகளால்

பதிப்பிக்கப் பெற்றது.

NELSON & CO., CHOOLAI MADRAS

வைராக்ய தீபம்

திருவளர் கமலத் தயன்செயிப் புவிமுன் றிகழ்தரு முலகெலாந் தன்பான், மருவுசிற் சத்தி யெனுங்கிர ணத்தால் வந்தெழு கானனீ ராக, விருமையா மதிமாய்த் தறிஞராங் காந்தத் திடை யருட் சுடரும்மிழ்ந் திலங்கு, மொருசிவா தித்தன் றனைநம திருள்போ யொழியநா டொரும்மிறைஞ் சிடுவாம். 1

துன்னியா ணவப்பாம் பெமதறி வெனுமோர் சுடர்கெழு பூரண மதியை, முன்னமே தீண்டிற் றெளிவெளிப் படலான் மோசந காலமெய் திய தாற், றன்னிடத் தீசன் முதற்புவி முடிவெண் டருநுரை யாதிவந் தொடுங்கப், பின்னைய பினை யாந் திரைகள்வீ சிடுமோர் பிரமவே லையிலினிப் படிவாம். 2

எப்பொருள் களுமா யொப்புயர் வின்றி யிருந்ததன் னுருவிறை குறையா, தப்படி யிருக்க

வாலியா நீரி னருளிறை யாமெமக் கேம, வைப் பென வன்னை யெனப்பிதா வெனக்கண் மணியெ னத் தவப்பய னெனவுட், செப்புயி ரெனவந் தாண்டகா ளத்தி தேசிகன் றிருவடி பணிவாம். 3

அருந்திய காலத் தற்பமாப் பிற்பே ரௌடத முடலினின் றுடலை, வருந்தல்செய் பிணியெல் லாமகற் றுதலின் வஞ்சனே னெஞ்சின்மாற் றரி தா, யிருந்தவெப் பற்றும் பிற்றைநாள் களின்விட் டேகவன் றேகடைக் கணித்தல், புரிந்தநங் குரவ னருளிருந் தமையெப் பொழுதுமுண் ணினைந்து வாழ்த் திடுவாம். 4

அரையன்வா யுரைகள் வரைதரு முடங்க லதுவரக் காணின்மற் றவனு, டரையின்வாழ் பவ ருண் ணடுங்கியோர்ந் ததன்வாய்ச் சாற்றிய முறை செய்வா ரென்றூற், கரையில்பே ரின்பந் தரவெ மக் கிறைசொல் கட்டுரை யென்னின்வே றென்னை, யுரையுள வேதா கமமவ னெனக்கண் டுரைத்தவா புரிகுவ தல்லால். 5

கற்பழ மாகப் புரிதலிற் பெரிதென் கருத் தினைத் திருத்திவந் தாண்ட, சிற்பர னருளாற் சொற்பொரு ளறியா தேனும்வே தாகம வழி யீண், டுற்பவ மாதித் துயரைமுற் றவத்தா னுணர்ந்தவர் துறவெனும் வாளா, லிற்பொருந் துதலை முதலவா வறுத்தோ ரின்பவீ டுறல் சொலற் கியைந்தேன். 6

துணையில்பே ராசைக் கடலுளோர் கரை யாந் துறவுவந் துறவுவந் ததற்கோர், புணையெ னப் பெரியோர் வகுத்தநூல் களின்முற் போதம் லேனுமீ துரைத்த, லுணையமெய் வருந்த வய னெடு மாலன் றயர்ந்துதாழ்ந் தோடியுங் காணு, விணையிலி நடித்தல் செயமருங் கலகை யினம சைந் திடுதலி னன்றே. 7

கயல்விழி மனைவி யனைமுத லியவாங் கட் டது தனையென தெனவு, மியல்பதா மசுத்த மாதியா ருடற்கட் டிதனையா னெனவும்வைத் தெணுமோர், மயலதா மிருளைத் துறவெனு

மொளியான் மாற்றிநெஞ் சகத்தினை விளக்கஞ்,
செயலினிந் நூற்குப் பெயர்வயி ராக தீபமென்
றுரைத்திடப் படுமால். 8

பாயிர முற்றிற்று.

நூ லாசிரியர் பெயர்.

உருட்கறங் கூசன் மநமொடுங் கிடவென்
னுணர்வுநேத் திரக்கியா னெனதா, மிருட்கெடுத்
தெலாமாம் பொருட்டிகழ்த் திடுமோ ரெழில்வயி
ராகதீ பத்தை, மருட்கொடும் பாசக் குழிக்கண்
யாம் வீழா வகையரு .ளினன்மறை முடிவின்,
றெருட்கமை வீர சைவனெஞ் சாந்த லிங்கதே
சிகன்றெருட் சுடரே.

நூல்

தோன்றினின் றழியப் படுங்கொடும் பிறப்பிற்
றுன்பமே யன்றியெட் டுணையு, மூன்றிநெஞ்
சகத்தோர்ந் திடிற்பிறி திலையா லுண்டுபோற்
றிரித்துயிர்க் கெல்லாந், தான்றிகழ்த் திடுமோர்
வகற்றிரு ளிருளுநந் தவிர்ந்துமற் றதுமுள படியே,
யான்றவீ டுறமுற் பவந்தவம் புரிந்தோ ரகத்தி
னுட் டெரிதரு மன்றே. 1

உடலிதுற் பவத்தோ ரைம்பெருந் துயர்
மாய்ந் துறுகணத் துயரிணெண் மடங்கா, லிடை
யுள திதிக்கட் டுயரமூப் பறிவோங் கிளமையிற்
பிணியுறு விடத்தும், விடலரும் பசிநோய் காம
நோய் தணிப்பான் மிகுபொரு டேடுத றுயரீண்,
டடையினு மதனைக் காக்குத றுயர்வேந் தாயினு
மிகுநரற் றுயரே. 2

இளமையிற் பிணியற் றொருகுடை நிழற்கீ
ழிருநில முழுவதும் புரக்கும், வளமைபெற்
றுடைய மகற்குமெப் பொழுது வருங்கொல்கூற்

றெனும்பயத் தானு, முளமிகப் பறைநின் றறையு
மேற் புவிமீ துடையரோ மற்றைய ரின்பங், களி
மிகுத் திருப்பர் தெளிவிலா மையின்மேற் காரி
யங் கருதுறு நாரே. 3

பிறப்பிறப் புடைய ராயிடை யினும்பல் பிணி
பயந் தணிவில்கா மாதி, யுறப்படு தலின்வா
நவர்க்குமற் றென்னை யுளசுகந் தேவின்மா
நுடத்திற், சிறப்பிவை யென்றுற் குறுக்கியோ
நிகளின் றீமையுங் கொடியர்வீழ் நிரயத், தறப்
பெருந் துயரு முரைப்பதென் பிறப்பூ டாதலாற்
றீதலா திலையே. 4

அரிதுபெற் றிடினும் பெற்றதின் விருப்ப
மறப்பெறு தனவிருப் புயிர்க, டெரியகிற் கிலமீ
தென்னமுன மடையாச் செல்வமாய்ச் சொல்ப
வித் திரமா, யுரியசிறு சுகமாய் நித்தமா யொருவீ
டுளதெனக் கேட்டுமற் றதனிற், பிரியமற் றினமு
முனமுறும் பொல்லாப் பிறவியே பெறவிரும்
புதலே. 5

துன்பவெம் பிறப்பி னிழிவையு மழியாச்
சுகபர வீட்டுயர் வினையும், பின்பவை தொலைத்
தெய் தருங்கரு வியதாப் பெற்றவிப் பிறப்பையு
மிதனின், மின்புரை நிலையா மையையுமோர்ந்
தனனோர் விவேகியு மெனிற்பினும் விடயத், தன்
புரு வீடு புகமிக விரையா தரைக்கணந் தரைக்க
ணுற் றிடுமே. 6

வினைப்பிறப் பொருவன் றுயரமென் றுண
ரின் விடயபோ கங்கணச் சுதலுந், தனக்குட
லநிய முணர்தரின் மரணஞ் சார்குறிக் குளநடுங்
குதலு, நினைத்திடி னிதன்பேற் றருமைமா
தவங்க ணீங்கிநாள் கழித்தலுந் துணிவி, லநித்த
மோர்ந் திடினோர் கணமெதிர் காலத் தவதிகூ
றிடுதலு மிலையே. 7

கருமமொன் றியற்றப் பிறர்கையிற் கருவி
கவர்ந்துளோன் பினுமவர் கொளுமுன், விரைவி
னெண் ணியசெய் யாதுமற் றதையே மிகச்சிறப்
பித்துநோக் குதல்போற், புரையில்வீட் டின்ப

மடைகுவா னதற்குப் பொருந்திய வருந்தவம் புரியா, தொருகண மேனு நிலையிலிவ் வுடல்வைக் தொப்பனை செய்துநோக் குதலே. 8

பவத்தனிப் பரவைக் குரவையைத் தாஙப் படுவையைக் கொடுகடப் பரிதா, லுவப்பொடு தவப்பா தையினிவர்ந் தன்றி யுண்மையித் தகவி கந் துலகோ, ரவப்பொழு தகல விருப்பதென் விருப்போ வகன்றவர்க் கருத்தலா திகளாற், றவத்தினை மறந்தார் கொல்லெனுஞ் சொல்லைத் தமதுளத் துணர்கலார் போலும். 9

ஈதலே யறமு மநித்தமா மனைத்து மிகழ்ந்து கை விடுதலே வீடு, மாதலாற் றூஙக் குரியவில் வாழ்க்கை யதனையே யறமெனக் கூறிக், கோதி லா வீட்டி னிலக்கண மிருத்தல் குறித்துமெய் யுணர்வையுந் துறவு, டோதினர் வேதந் றனைத் தமி ழுருவத் தொளித்தெமக் களித்தவள் ளுவரே.

நிறந்தருந் தெய்வப் புலமைவள் ளுவனார் நீத்தவர் பெருமைநூன் முகப்பாற், சிறந்திட

வமைத்தாங் கதுகொடில் வாழ்க்கைச் சிறுமைநூற்
றினாரது தெரியார்க், கறந்தவா தியற்றி னவனி
னுங் கோடி யதிகமா மெனமரு மறுது, துறந்து
ளோ ரூனயும்பட் டணத்தெம தடிக டொகுத்தகட்
டுரைதிகழ்த் திடுமே. 11

பிறப்பெனு முவரிச் சுழியதா மெழிலார்
பெண்டிரா தியவுயிர்ச் சார்வுஞ், சிறப்புறு புவியா
தியபொருட் சார்வுந் தீரநீக் குதலற வவற்றா,
டுறப்படு மெவைநீப் பினுமறி வுடையோ ரொரு
தம தனேபிதா வினேயுந், துறப்பரேற் றுறப்
போர்க் கருநர கெனநீ சொற்றசொற் சத்திய
மாமால். 12

விடையதூ ரிறையே தாதைமற் றவன்பான்
மின்னெம தன்னேயன் னவரைக், கடையரே
மறந்து துறந்துதா னன்றே கடும்பவ விடும்பை
யுற் றனமிவ், வடைவுணர்ந் திலபோன் றுட
விதற் கேது வாயவர்த் தாய்பிதா வெனநெஞ்,
சுடைவுறு நின்றுய் பவந்தொறிவ் வணமுற் றுள
வுயிர்க் களவியா துரையே. 13

தனதகத் தகலா திருந்துபே ரின்பந் தருத லான் மனைவியுந் தன்பா, லினிதுதித் தொருதன் வினையொழித் தசையா திருத்திவீட் டமுதருத் துதலா, லுனலருஞ் சுதனு மொருவனுக் கவனா டுதயமா யெழுந்தமெய் யுணர்வே, பினையிஃ தன்றி மனைசுத ரெனயாம் பேணிநாட் கழிப்ப தும் பிழையே. 14

வேண்டினுண் டாகத் துறக்கவென் றமை யால் விருத்தனுய்க் கருத்தழிந் துருவங், காண் டல்செய் விழிபஞ் சடைந்துட னடுக்குங் காலம் வந் தடைவதன் முன்னர், மாண்டகற் பதனுற் சாலியைப் போலு மனைவியா தியசமா தியினுற், றீண்டுமா நந்தம் பலவடைந் திடுதற் கெண்ணி நீத் திடுவர்புண் ணியரே. 15

இளமையின் மனையைத் துறத்தறீ தெனிற் ற னிறத்தலிற் றுறத்தலீ டலவா, லளவிறீ தஃ தாங் குயிர்ச்செய லன்றே லாபற்சந் நியாசந்தீ ததுமெய், விளிதலாற் பழுதின் றேற்பினு மிருப்

பார் விடுதறீ தடுபிணி குறித்தே, லுளையுசோ
யிலரு மிறப்பதென் பிறப்போர்ந் தொழித்திடிற்
பழித்திடா துலகே. 16

இக்கணத் திருந்த தினிவருங் கணத்தூ
டிருக்குமோ மரிக்குமோ வுடலென், றக்கண
மனையா திகட்கரன் றுணையா மன்றெனை
வெணித்துற வறஞ்சார், மிக்கவ ஞபற் சந்நியா
சியுஞ்சார் வினுக்குரஞ் சேர்த்திவிட் டவனுந்
துக்கமே வலிற்பின் பவரிவன் போலுந் துறவ
ரன் றென்பதுந் துணிவே. 17

பிறந்தவப் பொழுதே யினியொரு தலையாப்
பிறப்பறுத் திடுவமென் றெணியே, யுறைந்தனே
வயிற்றிற் பினையதுற் பவத்தூ டுறுபெருந் தூய
ரிஞ லுயிர்கண், மறந்துறு முறையுஞ் சுகரகன்
றமையு மதித்துநெஞ் சழிவினம் போல்வார்க்,
கறைந்திடு மலது பிறப்புணர்ந் தகல்வார்க் கவதியு
மறையுமோ மறையே. 18

கருப்பமா ருயிரத் துயர்பெயர்த் திடுதல் காரண பூரண ஞாநம், விருப்பமா யடையக் கடவ மென் றிருக்கும் வியாசர்சே யடைந்தது மதுவே, திருப்பியீண் டதனைத் துறவின்மீ தேற்றிச் செப்பலென் னெனிற்றுற வினைவிட், டிருப்ப தோர் ஞாந மெவன்கொனீத் தவரென் றிசைப்ப தென் பெயர்மெய்ஞ்ஞா நிகட்கே. 19

ஞாநியஞ் ஞாநங் கெடுத்தலாற் றுறவோ னெனப்படு நவிற்றினஞ் ஞாநந், தானுட லினைநா னெனுமக விருளென் றனையிஃ தெமக்குமொத் ததுவா, லூனமின் மறைதேர்ந் தொருசிவ நானென் றுளத்துணிச் சயித்தவக் கணமே, யானென றவிர்ந்தவ் விருளுமாய்ந் திடுமென் றிசைத்தனை யிதுபழு தன்றே. 20

திரிவித வுலகத் தரிதொரு ஞாநி தேர்விடத் தென்றுமோ ரொன்றை, யுரைசெயிற் பிரம வித் தையொத் தரிதோ வென்றுமிவ் வுலகுரைப் பதனு, லரிசொல்கீ தையிலும் பிரமசா தகரி

ஞர்க்குள வருத்தமென் பதனுற், பெரியதோர்
வருத்த மெனேமறை துணிந்தப் பிரமநா னென
விருத் தலினே. 21

வருத்தமொன் றின்றிச் சாரலாம் பிரம
மென்றயன் வகுத்தகீ தையினு, டுரைத்ததெற்
றினுக்கா யெனிற்பர ஞாந முணர்பவர்க் குன்னுத
லுரைத்த, னிரைத்திடு தொழில்க ளொன்றும்
வேண் டாது நீத்துவா ளாவிருத் தலினு, லருத்த
மற் றதனுக் கோர்ந்துநூ றெளித லாகநீ துணிந்
தனே போலும். 22

சிறியவர் மணற்சோ றுண்டுதேக் கிடல்
போற் றேந்துநூ றெளிந்தமாத் திரத்தி, னறி
தரிற் சிவமும் விடயமா மெனநீத் தகத்திரு ளுரு
துவைத் தந்தோ, வுறுமகம் பிரம மெனவுரைத்
திறுமாந் துறைதலோ ஞாந மஞ்ஞாநந், துற
வினை யுறு து மாயுமே வாயாற் சுடரொளி னிருடு
மிந் திடுமே. 23

ஞாநியே யெவரும் வணங்குதற் குரியோ
னவிலுமா சௌசமில் பெரியோன், மாநிலத்
தவன்றா னுடல்விடிற் குகைப்பால் வைக்கவென்
மறைப்படி புரித, றானும்வே தாந்தப் பொருடெ
ணிந் திடினுஞ் சாற்றினில் வாழுமந் தணர்க்கின்,
றனதாற் றுறவு பெற்றநற் றவரே யமலவீ டடை
யுஞா நிகளே. 24

தேர்ந்திடி னபரம் பரமென விரண்டாய்த்
திகழ்தரு ஞாநமாங் கவற்றா,டோர்ந்திடு மறையா
தியகலை யபர முயிர்பர னெடுவிர வயிக்கங், கூர்ந்
துண ருணர்வே பரமதைத் தெளியக் கூறன்மாத்
திரங்கலை ஞாநஞ், சார்ந்துணர் வரிதப் பரனை
யோர்ந் தன்றிச் சாற்றினவ் வயிக்கமாந் தலமே.

அடுத்தவிச் சீவன் றன்மையோர்ந் தன்றி
யறிவொணுப் பரனையஞ் ஞாநங், கெடுத்தலாற்
சீவன் றனையுமோர்ந் தொருவர் கிட்டொணு நன
வினிற் சுழுத்தி, யுடைத்துமற் றெவனுக் கவன
வஞ் ஞாந முடைக்குமுட் காரணவா தனைக

டைத்திடி னபாவ மெனப்படு நனவிற் சுழுத்தியு
மெளிவந்து தோன்றும். 26

யோகசா தனையால் வாதனை கரணக் கொழி
யுமவ் வியோகமு மிருமைத், தாகுமே கிரியை
ஞாநமென் பேதத் தாதநா தியதொழில் யோக,
மேகமாம் பொருடோர்ந் ததுவிது வெனுஞ்சுட்
டிறத்தன்மற் றையதிரு வகைக்கும், போகவேண்
டிடுமைம் புலன்களு மிறந்தப் புலனவா வொழித்
தலாற் போமே. 27

ஐம்புல னடல்வேண் டும்விடல் வேண்டு
மொருங்குவேண் டியவனைத் தையுமென், றும்ப
ரும் பாவு மொருதமிழ் வேத முரைத்தலா னே
ரிரு வகையா, நம்புறச் சார்பை வெறுத்தவர்
வறுத்ததைம் புலனெறிழித் தொழுங்கினு டருமச்,
செம்பொருள் காண்ப தறிவறி யாமை சிதைத்
தல்வீ டெனத்திகழ் தருமால். 28

அரம்பையுள் ளூறுதண் டெடுத்தலி னொருவ
னநுபவ மாஞ்சிவ முணர்த, னிரம்புமெய் யுணர்

வத் தண்டின்மீ தொன்றி நின்றநா ரனைத்துநீக் குதல்போல், விரும்பிரு வகைப்பற் றையுந்துறந் திருளை வீட்டல்வீ டிவற்றையே யன்றி,வரும்பர வுரனும் வீடும்வே றறியேம் வார்த்தைமாத் திரத்தியாம் பெறவே. 29

இருவகைச் சார்பா மொருபுறப் பற்று மிடை யதாங் கடையுடற் பற்றும்; விரிகர ணங்க ளாகு முட் பற்று மெனத்திரி விதம்விளங் கிடுமித், திரி விதத் தினையுங் காத்திரங் கரணஞ் சேர்த்தி யொன் றுக்கொடுட் பற்றும், வருபுறப் பற்று மெனவிரண் டாக மதிப்பரவ் வணந்துற வையுமே.

இருவகைப் பற்றி லொருவனே ஞானி யெனப்படிற் புறப்பற்ற தேனு, மொருவுத லிலரு மெவணமப் பெயருக் குரியர்வே றொன்றுமில் கொடியுந், தருமிலை மலர்கா யெனினகப் பற்றி றவர்புறப் பற்றையுந் தணவார், மருவினு மஃதோ ரொருவர்வே ரன்றீர் மலர்க்கொடி வாடுறு வகையே 31

வேரறக் கொடிவா டுதலினுட் பற்றை விடுக் கின்மற் றையபற்று நேரே, சோருத லியல்பா மதனையே முன்னர்த் தொலைக்கவேண் டுவதெ னிற் கடுமுட், சாருமோர் கொடியின் கிளையனைத் தையுமுன் றறித்தொழித் தலதத னிடையா, ரோர்தனி வேர்கொள் ளரிதரி தகப்பற் றொழித் தலும் புறப்பற்ற றுறவே. 32

முள்ளில்சில் கொடிவேர் கொளலின்முற் சநகன் முதலவோ ரொருவர்மற் றொருதம், முள் ளமா சணுகா வியல்பின னகப்பற் றொழிப்பினு முனமெனை யுறமுங், கள்ளநெஞ் சினர்பற் பல ரும்வீ டடையுங் கதியதன் மையிற்றுற வளந்த, தெள்ளியோர் புறப்பற் றொழித்தலே முதற்கட் செப்பின ரெவர்க்குமொப் புறவே. 33

விடத்தகு மகப்பற் றினைமுனம் புறப்பற் றொழிப்பதெற் றினுக்கென விளம்பல், படிற்றொ ழுக்கினர்சம் மதமும்வா நவரும் பயிலில் வாழ்க்

கையும்விடுக் குதலென், றெடுத்துமைக் கறிவா
சாரமோ தியசொற் கிழுக்குமா குதலின்மா சியல்
பாத், துடைத்தசிந் தையர்க்கு நிந்தையி லொழுக்
காச் சொல்வர்முன் புறல்புறத் துறவே. 34

ஒன்றிய பாச விருடோந் திடுதற் குபாயமைம்
புலனெடுக் கிடுத, லொன்றல திலையென் றது
செய்வோ னவைவேண் டனைத்துமுன் விடாது
வைத் துறத, லென்றுமெவ் விடத்து மெனைமுத
லுயிர்க ளெவற்றையுங் கொலைசெயேன் வெருட்
டே, னென்றுசொல் விரதி யொருவனு டொறுங்
கை யிடையினோர் படைகொளு மியல்பே. 35

சாதக தசைக்கண் விடயமே தடையாஞ்
சாத்திய மானபின் புசித்தற், காதல்வைத் திடி
னப் பிரமவா நந்தத் ததிகமோ விடயவா நந்தங்,
கோதில்வீட் டின்பம் பெறுகலா விடினுங் கூடு
தற் கெனிற்கரி பிழைக்கிற், றீதிலோர் சிங்க
மதனையே யன்றித் தேடுமோ தேரையூன் றின
வே. 36

படையெடுத் தமர்க்கட் சாருமோர் வீரன்
பகைஞரைச் சயங்கொளா விடினும், விடையெ
னப் பொருதாங் கிறத்தலே யன்றி வெந்நிட வுன்
னிடா னதுபோற், கடையென விடய மிகழ்ந்து
பே ரின்பங் கருதினேன் பெறுகலா விடினு,
மிடையரு ததைநா டுவதலான் மறந்து மெண்
ணுமோ மண்ணின்வாழ்க் கையையே. 37

இந்திர சாலத் தொருநகர் காண்போ ரெ
னத்தநு முதற்பிர பஞ்ச, நந்தினுங் கெடினும்
பூரியா வாடா நன்மநச் சநகநா தியரு, மந்திரி
முதலோர் மீதுபூ பாரம் வைத்தொரே காந்தத்
துள் வதியாத், தங்தொழி லொருக்கிச் சமாதியுற்
றன்றே தவிர்ந்தனர் காரணவா தனையே. 38

சொற்றிடின் மயக்க மற்றுதித் துளவச் சுக
ருமொண் டாதையைத் துறவா, வுற்றிருஞ் சமாதி
யுற்றகப் பற்று மொருவிவீ டடைந்தனர் சநகர்,
முற்றவ முனிவர் நால்வரு மொருநான் முகப்பிதா
விடத்தவன் வளர்த்தோர், பற்றுமற் றகப்பற்

றையுமுயர் சமாதி பணியொழித் தெணியவீ டடைந்தார். 39

தத்துவ முணர வேண்டினேன் மனைமுற் சகலமும் விடுத்துமெய்ஞ் ஞாந, முத்திரை திகழச் சமாதியுற் றல்லான் முடியுமோ வென வுமை முதலா, வைத்ததற் குழாத்தை யொருவி நீள் கல்லான் மரத்தினீ ழலிற்சமா தியையுற், றத்தனே யுணர்த்தி ஞனெனிற் பினும்வே றறை தனம் மிகுமட னன்றே. 40

எடுத்துள குடும்பச் சுமையொடீண் டொருவ னெங்ஙன ஞாநவா சானை, யடுத்தவ னேவ ஞெ டுத்தருள் சுரக்கு மளவுநின் றுளமகிழ்ந் தன் னேன், கொடுத்தநாள் வாங்கிக் கொளும்பா மார்ததங் கூடினுங் காலமா திகளாற், றடுத்துரை தொழிலை விடுத்தலாற் சமாதி சார்ந்தலீ துணர வும் படுமே. 41

தனித்திருந் தொருதம் மநத்தையைம் பொறிவாய்த் தடுத்தகப் படுத்திலீ தெத்தை,

நினைத்தெதா நின்றதென்றுநோக் குநரே நீக்கு வர் வாக்கொடு தொழிலைப் பினைத்தடை யாம் போக் குவரில்வாழ்க் கையையும் பெச்சைநா டொறும்பழ குநர், தனைத்தின்றென் றேனும் விடார்பிறர் காண்ப தன்மையர னகப்பற்றே விடுப்பார். 42

தந்தைதாய் முதலாம்பந்தநீங் கிலர்க டா முய்ய நெறியதின் றெனுஞ்சம், பந்தனு ருரையும் வேண்டிய தெய்தப் படாதுசுற் றமும்விடா விடி னெ, னெந்தைவாக் கரைய ருரையுமா தியவாக் கியம்பிர மாணமா மெனக்கொள், புந்தியார் புறப் பற் றுறவகப் பற்றைப் போக்கவாய்ப் போக்குத விலரே. 43

விடுக்குநர் புறப்பற் றதினுயிர்ச் சார்பை விடுத்துமற் றையபொருட் சார்பைப், பிடிக்குத லொழுங்கன் றெனினுறை யிடமும் பேணுரு தொழித்தறீ தெனவே, படிக்கணீ யுரைக்கக் கேட்டன முனைப்போற் பற்றிநோக் காமையி

னன்றோ, விடுக்கவெனன் றனைத்தும் விடுத்தன
ருலக மேத்துபத் திரகிரி முதலோர். 44

துறந்தவன் பொருட்சார் புறவறி விலர்க்குத்
தூயஞா னாதிசாத் திரங்க, ளறைந்திதம் பேசிப்
பொருள்கவர்ந் ததனு னச்சமு மிச்சையா திக
ளுஞ், செறிந்துற வகத்துண் டினியவூ ணிருக்
குஞ் செய்தியா னெய்சொரி தழல்போ, லிறந்தி
டா மரவா தனைபினைத் தனதோ ரெணத்தை
யெவ் வணத்தினன் முடிப்பான். 45

பொருளறத் துறந்து பைக்கமேற் றருந்திப்
பொருந்தினு மோரிடம் பிடித்துள், வெருளறப்
பனியா தியினுடற் பழக வேண்டுமின் றுகுத
ருனு, மிருளறத் தீப மேற்றன்முன் றொழில்க
ளென்றும்வேண் டிடுதலா னிடரு, மருளறச்
சிதலை முதலுயிர்க் குறுக ணுற்றலு மதன்
பொருட் டாமால். 46

பிறிதுநோய் தன்னேய் போன்றுபோற்
றுனேற் பெரிதுநூ லரிதினோர்ந் துணர்ந்த, வறி

விஞ னுண்டோ வாவதென் றமையா னறைதரு
சராசர மெவைக்குஞ், சிறிதுமோர் துயர மறவி
யுற் றேனுஞ் செய்யுமே மெய்யுணர் வடைவான்,
மறுவறு துறவைப் பொன்செய்வா ணிகர்போல்
வருந்திநா டொறும்வளர்ப் பவனே. 47

தனக்கினி யவனும் வகைசரா சரங்க ணினை
கவென் றுமைக்குரைத் ததுவும், வினைக்கடல்
கடந்த பரதர்முற் சிவிகை சுமந்துசென் றதுவு
மோர் மேலோர், பினைக்கொல்பாம் பாதி யுறு
தலஞ் செலுங்காற் பேணலிற் றமைநடந் திடும்
போ, தினக்கறை யானு தியமரி யாதங் குரமுரி
யாதியங் கிடுவார். 48

தம்மிடத் தேனுந் தமக்கினி யவர்பா லேனு
மோ ரிடர்வந்து சாரி, னம்மஞூழ் முறையென்
றறிந்துமேழ் கடலோ ரணுவென வுருகுமென்
போல்வா, ரிம்முறை துயர்வே றுயிருறி னிரக்க
மின்றிய தன்றியுந் தம்மால், வெம்மைய கொலை
யொன் றடையினு மதனூ ழென்பதென் மிகமுக
மலர்ந்தே. 49

இம்மையி னிகழ்ச்சி மறுமையிற் சிறுமை
யெய்துமென் றுயிர்க்கொலை புரியாச், செம்மை
பைங் கநக மாதிகைப் பற்றுத் துறவினைச் சில
ரடைந் திடினுந், தம்மையொத் துயிர்க ளனைத்
தையுங் காணுந் தயவுயர் தபனிய முதல, மும்
மையு மோட்டிற் காட்டிலன் னையிற்காண் டுற
வொரோர் தவர்க்கலான் முடியா. 50

அறைதலிற் கொல்லா நலத்தது நோன்மை
யெனவரு டுறவுசா ரகத்து, டுறுமஃ துறவே
சினமழுக் காறங் குறுமையாற் கொடுஞ்சொல்கூ
றுமை, புறமுரை யாமை மருவிய விரண்டாற்
பொருவின்மெய் புறுதியோர்ந் துரைத்த, னிறை
பெருந் தவத்தோர் வாக்கினிந் நான்கு நிகழுமென்
றியம்புவர் நெடியோர். 51

கான்றசோ றதனிற் கண்டுபொய்ப் போக
மனைத்தையுங் கைவிடுத் திடினுந், தோன்றுல
கினைமெய் யெனக்கொடு மீக்கூற் றுறவிருப்
படையினத் துறவோன், சான்றதா யுளதன்

னுளமிலை யெனவுந் தற்பரா நந்தமுற் றவனைப்,
போன்றிரு விழிமேற் செருகியீண் டுரைக்கும்
பொய்யையெவ் விதத்திஞற் போக்கும். 52

இத்திற னருள்கைப் பிடித்தெலாம் விடுத்
தோ னேவல னொருவனே டுறினுஞ், சித்தசஞ்
சலமுண் டவனேரோர் காலை செய்புஞ்செயல்
பிழைக்கினுட் சீற்றம், வைத்திடப் படுத லாற்றன
துடற்பால் வந்தொரு பிணியுறிற் றுணிவோ,
டத்தனே யுளனென் றிருத்தலி னிருத்த லரித
ஞேன் றனையுறி னதனுல். 53

யாதியா தொருவ னீங்கியா ஞேத லதனிஞ
லதனிஞ விலனென், ஞேதலா லனைத்துந் துயர்
தரு மெனநீத் துயர்பரம் பொருளினைக் காட்டுந்,
தீதிலோர் குரவ னெங்குள னெனவே தேடுமா
லலைகடல் சூழும், பூதல மிசையோர் துறவிஞே
னறவு பொலிமலர் தேடும்வண் டினைப்போல். 54

சமரமுற் றிடாது புறந்திரி யொருவன் றன
தெதி ரடைதரு படைக்கைக், குமரரை நோக்கி

மிகுபராக் கிரமங் கூறினுந் தேறல ரதுபோ, லமர்
தரத் துறவு சமாதியோ திடினு மவற்றினுக் கய
னடை யினரேற், றமரெனத் துணிவுற் றவரொ
டும் பழகார் தத்துவ நிலைதலைப் படுவோர். 55

நீரிடத் தன்றி யந்தரத் திடையே நிகழு
மோர் மரைகொள விரும்பார், பாரிடத் தெவரும்
விநோதிகள் சாலம் பண்ணலென் றெண்ணிமற்
றதுபோற், சீருடைத் துறவு சமாதிபெற் றுலகிற்
றிகழினு முயிர்க்கெலாந் தயவுஞ்,சாரருட் குருபத்
தியுமிலார் தமையுந் தமரெனப் பழகவுந் தகுமே.

இதுநெறி யெனவோ ரூர்க்குமற் றொருவ
னேகினு மாத்தன்வாய்க் குறிக,ளதுதனிற் காணு
விடத்துல கருமோ ரடிபெயர்த் திடுகல ரதுபோ,
லெதிரது சமாதி யாதிபெற் றுடையோ ரென்
னினு முன்னவ னுரைத்த, சதுர்மறை யாக மாந்
தநிந் தகரேற் றமரென லவரையுந் தகுமே. 57

ஈங்கறை முறையிற் றேர்ந்துபா ரிதன்மீ
தெங்கணுந் தேடியோ ரிடத்தி, ஞேங்கருண்

முதல நான்குமோர் வடிவா யுளதென மறையி
னீற் றுரைக, டாங்குநா வொடுஞ்செங் குவளைமார்
பொடும்பொற் சரணொடுஞ் சரணென வடைந்
தோர், தீங்கொழித் தருள்வான் றிகழுமோர் குர
வற் கண்டுளங் குளிர்ந்தனன் றெளிஞன். 58

காரிய மாக லாற்சகம் படைக்குங் காரணன்
குலாலனி லுளனெனன், ஞேரியல் பெனவேழ்
கடலுமொன் றுக்கி யொப்பிடுங் கருணைய னே
னும், பேரியை பிறப்புத் தனையடைந் தவர்க்குப்
பிணையுறு வகைகெடப் பார்க்குங்,கூரிய விழியோ
ஞதலி னறவுங் கொடியனு மாகுமக் குரிசில். 59

செப்பிருங் கைலைக் குருமுறை மையிற்றன்
சிரமிசைச் சரணம்வைத் துளவோர், மெய்ப்பர
னருளை நினைதொறு முளந்தீ மெழுகுகல் லென
வுரு கிடினு, மைப்பவந் துடைத்தன் பினர்க்குவீ
டளிக்கும் வல்லப முடையமற் றெருதா,
னெப்புமிக் கிலியா கலினிறை பத்தி யுளனுமன்
றுருகுமவ் வும்பன். 60

கருடனை நினைவோர் பார்வையாற் பிறர்பாற் கடுவொழித் தலிற்றனை நினைவோ, ரொருவரை நோக்கி னவர்களும் பாச மொழித்தல்செப் துற வொடேய்ந் துறினு, மருண்மகட் புணர்ந்து ஞான சந் ததிபெற் றவரொடு மகிழ்ந்திருத் தலினக், குருபரன் றன்னைப் பின்னைநே ரில்லாக் குடும்பி யென் றுரைக்கவும் படுமால். 61

குலவுசெங் கதிரோ னிருளினை யுணராக் கொள்கைபோற் ருெருகாலுஞ், சொலுமறி யாமை யறிகிலா ஞானத் தோன்றலே யெனினு மத் தூயோ, னிலகுமா நந்த வுருவினை யணுக்கட் கீந்ததற் கிணையொரு துணையின், மலவுட லவர் பாற் கவர்தலி னிஃதோர் மடமைபெற் றுடை யனு மாமால். 62

வதுவைநாண் மறையோர் வழங்கியாத் திரை யின் மற்றருந் ததியைநோக் குதலி, னிதுவு மொன் றெனத்தம் முடல்பொரு ளாவி யீயுமெம் போலிக டமக்குங், குதிரைகொண் டிடவன்

5 துட லாதி கொடுத்தவன் போற்கொடுப்
கும், பொதுமையுற் றிவனோர் மாநிடன்
ய்த் திகழுமப் பூரண புராணன். 63

பாரினட் டாங்கா திகளொடக் குரவற் பல
ம் வலம்வந்து பணிந்து, சீரிய துதிசெய் தநு
மவற்றுற் றிருவுளத் தடைக்கவும் பட்டுத்,
ரமோ டணிமை யறவிறை கருணை சுரக்குநா
ளவுநின் றேவ, லாரிவன் றனக்கொப் பெனச்
சய்தொண் சரண்பெற் றறியவேண் டுவமுழு
தான் 64

சற்குரு வருளா லையமுந் திரிவுந் தானற
றமுடி வுணர்ந்த, பிற்குரு பரன்றுண் முற்
ண் புகுந்த பெரியவ ரினமரீஇ யிருந்தொண்,
சாற்களி னரிய பொருள்கடேர்ந் தவணங்
காலைத்தொரு சிறிதுநாட் பின்னர்க், கற்குத
னைத்துநீத் தென்று ஞாநசா தகத்தினுள்
பான். 65

அரும்பொறி யின்மை பழியன்றி
மறிவறிந் தாள்வினை யின்மை, பெரும்பழ
லா னொருவன்வீட் டின்பம் பெறுமைகெ
கலர் பெரியோர், விரும்பலோ தடைபும்
யருட் குருவான் விளங்கிபு முளங்கையிற்
போல், வரும்படி நாளு முயன்றுறு வென்
மதியிலார் தமையிகழ் வதலால்.

பகர்தரு தொழில்க ளனைத்துமோர் சி
பண்ணவேண் டுவபணி விடுத்துப், புகல
யடக்கித் தனியிடத் திருந்து போற்றிசெய்
குரு பதம்பின், மிகமுயன் றிதய வருத்
தாமன் மெலிந்துகை விடுதல்செப் யாம,
மாக்கி மநத்தைநா டொறுமோ ரைம்புல
தசை வறுப்பான்.

உச்சியம் போதின் மீதரும் பசிக்கவ் வூ
மாயிலந் தோறும், பிச்சைகை யிடையிற் கா
மேனும் பெற்றது பற்றிபுள் வெறுப்போ
யற் றருந்திப் பொருந்தவே காந்தத் திலவன

தாகம்வந் தடையி, னச்சிநீ ரூரிற் புகுந்துரு தேரி
யாதியி னருந்துத லன்றே. 68

ஞாநசா தகன்மற் றுதயமா தியினா ணயக்
கொளு மயக்கமா தலினு, மீனமார் விந்து மிகு
மெனு வகன்றூ ரிகழ்ந்துகை விடுத்தவா தலி
னுந், தானிரந் தொருபோழ் தருந்திடு முணவுஞ்
சமமலாற் றூழினு மிகினு, மூனதா ருடற்க ணே
புறு மற்றைக் குறைக்கமு மிகுந்திடு மன்றே. 69

மிகுத்திடு முனமிற் படுதழ லவிப்பான் விடு
பவன் கலங்கனீர் தெளிநீர், பகுத்திடா னது
போற் காடிசோ றேனும் பசித்தவன் புசித்திட
றகுமா, னகத்தவர் மனைதோ றுழன்றெனக் கடிசி
னல்கிடென் றொருவன்வேட் டுணலா, னகத்துறு
பசியும் போக்கிமற் றதுகொ டதிகமேன் பயன
டை வானே. 70

எரிந்தெழு பசிநோய் தணிக்கவோர் மருந்
தென் றேற்றுண தொருவனுச் சுவைவேட்,
டருந்திடு மளவும் வருந்தியப் பிண்ட மளித்தவர்

தம்மைநோ வதுவென், னிருந்துள கிரக வாழ்க்கையும் பிணிவந் தெய்திய துறவுமல்ல லதுவீண், டிரிந்துடல் வளர்த்தி யெனத்தனை விடுத்த தெய்வத்தை நோவது மறந்தே. 71

எய்தவ னுறமற் றேவையென் னேவ தெனவுல குரைத்தலி னொருதாஞ், செய்துள வினைக் குத் தக்கபே றிறைவன் சேர்க்குத றனைமறந் தென்னோ, வுய்தவ மறியாக் கைதவ ரைய முதவிடார் தமையுத வினரை, வைதல்வாழ்த் திடுதல் செய்துமற் றொருசாண் வயிறுநா டொறும்வளர்ப் பதுவே. 72

தன்னரு குறுசேய் சிரத்தொரங் குலியாற் றுன்புடைத் தொருவன்மீ தொருவன், சொன்ன மாத் திரத்தி னவனையச் சேயுந் துணிவுகொ டெழுந்தறை குதல்போன், முன்னவன் விளையாட் டாயவைந் தொழிற்கு முன்னிலை யாயசீ வரைப்பார்த், தின்னல்செய் சாப மிட்டுமா தவரு மென்கொலோ தவமிழப் பதுவே. 73

பெண்ணைவிட் டகலா வொருவிடன் றன்
ளைப் பிறர்வழக் கினிற்கொடு போகக், கண்ணை
விட் டகலா தவள்வரல் போலுங் கண்டுகொண்
டேகியாங் கஃதெவ், வண்ணமா யினுஞ்சீக் கிரத்
தினின் முடித்தவ் வனிதைபான் மறிதான்
மானப், பண்ணிய சமாதி விடுத்தறி ஞருந்தம்
பசிதணித் ததைபுறும் பரிசே. 74

நடந்துறங் கொருவன் றனைமல ரமளி நண்
ணுமா புரியின்மற் றவனுங், கிடந்துறங் குவதைக்
குறித்துமுன் னுறக்கம் விழித்தவா கிளக்குதல்
போலுங், தொடர்ந்தொரு கணமு மிடைவிடா
ஞாந நிட்டரைத் தூயதஞ் சமாதி, யடைந்தனர்
விடுத்தா ரென்பரே காந்த மவர்க்கநு கூலமா
தலினே. 75

நித்திரை தடைமீ றிடிற்கைகால் போர்த்து
நிசியிடைப் பூவணை துயில்வா, ரொத்துரு விடை
யிற் கிடையுமப் பயிக்க வூணுமெங் ஙனமித

மென்னி, வித்தரை யோர்நித் திரைமிகிற் பாயு மெரிகொடும் பசிமிகிற் கறியுஞ், சித்தமே வேண் டா வென்றசொல் லன்றோ தெரியுமோ வவர்க் கவை மிகலான். 76

தென்பர வையினுட் கழிவட பரவை சேர் நுதத் துளையினிற் செலல்போ, லொன்பதிற் றுன்ப தோடுழு விலக்க முளவியோ நியும் பிழைத் தேறிப், பின்பிறப் பிதுபெற் றதனினும் பாதி பிறப்புறு நாளதாக் குநரி, னின்பமீ தென மிக் குறங்கலர் பிறவிக் கறவெரீஇ புளந்துளங் கிடுவோர். 77

அறவுநித் திரையைத் துறந்திடி னுடற்க ணடைதரும் பிணிகண்மற் றதனுற், குறைதலு மிகலு மின்றியோர் சமமாக் கொண்டுகண் டுயின் றுபின் விழிக்கி, லுறுசுகா நதத்தி லெழுதுசித் திரமொத் துறைகுவ ரிறைதலை கழுத்தான்,செறி யுடல் வாங்கா தோங்கநே ரவர்பாற் சேருமோ காமநோய் சிறிதும். 78

உறக்கமும் பசிப்பு மிகுந்திடிற் காம முற்றிடா
தற்றபோழ் துள்ள, மிறக்குமொண் சமாதி யடை
தலி னடையா விடையிலு மடுபவத் துயரை,
மறக்கலா மையினு லச்சமும் வீட்டை மதித்தலா
விச்சைப்பு முடலை, வெறுக்குநிக் கிரகத் தாற்களிப்
பறலு மேவலான் மேவிடா ததுவே. 79

எங்குள புனன்மற் றிதுகழீஇ யிடுதற் கென்
றுகா லிடைப்படு மசுத்தக், கங்குடல் குலைப்பு
மொருமகன் மலம்புக் காடவு நாடுமே யதுபோற்,
பொங்குபுன் மலவூன் பொதியிதென் றொழிப்ப
லெனவரு வருத்துடல் பொறுக்குந், துங்கமா
தவற்கு மெங்ஙன மடவார்த் தோயவு நேயமுட்
டோன்றும். 80

அருந்தவம் புரிவோ ரெதிருரு வசிதா ஞதிய
மாதர்வக் துள்ளம், வருந்திநின் றியாது புரியினு
நோக்கார் மற்றிவ ணுற்றமா தரையும், பொருந்து
மோர் வெளின்மீ தேறவிட் டுளநாய் போனனி

நோக்குமென் போல்வா, ரிருந்துள விடத்தாங் கவர்வரின் விழியோ டென்படு மோபதைத் திதயம். 81

பெற்றதாய் முதலோர்ப் புரையமா தரை யெண் பெருந்துற வடைந்துளோன் றவழுஞ், சிற்றொரு மினைத்தன் மனையென விநோதத் திறத்துரைப் பினுமுனங் கிரகத்,துற்றநா டனது மகடனை யவண முரைத்திடா மையிற்பழு தென் ரூற், பொற்றொடி யவர்தோ டழுவவும் விழைதல் புரியினென் னுங்கொலவ் வறமே. 82

சிறந்தகற் புடைய மாதரும் பரத்தை யரும லாத் தெரிவையர் புவிமேற், பிறந்தநாட் பிறந் தான் போலுநெஞ் சகத்தைப் பிரிநடை புரியனு மொருவ, னிறந்ததன் னிச்சை யெவணமவ் வண்ண மிகத்திலுஞ் செயப்படா துடலைத், துறந்தகா லையிலு நரகில்வீழ்த் தியம தூதுவர் வருத்தலி னன்றே. 83

மைப்படு விழியா ரின்பமோர் முள்ளி மல
ரின்வாய்த் தேனையொப் பெனக்கண், டொப்பில்
பே ரின்பம் வேண்டினேன் வேண்டி யுலகர்வே
றெவைகொடுத் திடினுந், துய்ப்பமற் றுடுப்ப
விரண்டுமே யன்றித் தொடுவனே பிறிதிவற்
றினுக்கூர், குப்பைசா ரிடம்புக் கிடுதலி னவற்
றைக் குறித்தொரோ ரிடம்புகா மையினே. 84

தனைநனி யிரந்து வருந்திமற் றொருவன்
சந்தந மாதிய பூசி, யினமலர் மாலை புனையினு
முனியா விழுத்துவை தடித்துதைத் துடலிற்,
பிணமல மாதி பூசினு மன்னேன் பிரியமப் பிரிய
மொன் றின்றி, வினைவழி முனைவ னைந்தொழில்
புரியும் விதத்தையே நோக்கியுண் மகிழும். 85

தந்தைதாய் பலமா தியகொடுத் திடவுந் தக்
கைபுண் செவியினுக் கிடவு, மைந்தவா வெனலுங்
குதித்தெழுந் தோடி வருதல்போ குதல்செயு
மகவி, னைந்தொழில் புரியு மெந்தையூழ் வழியீந்
தருள்சுக மாதிய வருங்காற், சிந்தையுள்

விழைந்து முற்செலா ரழிந்து பிற்செலார் மாச றத் தெளிந்தோர். 86

இத்தரை யிடைப்பா ழாயவா லயமற் றிருண் மிகு முடுக்கரா திகளிற், சுத்தமெய்த் தவரெப் பொழுதடைந் தறினுந் தோன்றுரு தச்சமங் கவர்பா, லத்தனிவ் வுடலைப் புரக்குஞான் றழிப்பா ரிலையவ னேபினு மழிக்கின், வைத்திவண் புரப் பா ரிலையெனுந் துணிவு மநத்தினு ளிருத்தலி னன்றே. 87

ஊனையோம் புதல்கை விடுத்துனை யுவப்பா ருணர்வரென் றுளுடை நம்பி, தானுரைத் தமை யா னுடல்விழைந் திடினத் தத்துவ நிலைபுங்கை தவறி, யீனமார் பிறப்புற் றிடுவனேந் தொழிற்கு மிறையதி காரியென் றெண்ணு, ஞானமொன் றனையே தொடருமோர் புருட னண்ணுவன் பர கதி திண்ணம். 88

உள்ளதுண் டாமற் றில்லதின் றெனவெண் காடரோ திடுதடி னுறுமூழ், தள்ளொணு மையி

னெவ் விதத்தினு நுழைந்து தவம்புரி காலையூ
னுயிரை, விள்ளல்செய் திடினு ஞாநசா தகனுண்
மேவுமவ் வாதனை யொடும்போய்த், தெள்ளிய
போக முண்டுமீண் டடைவன் சிவமதுற் பவம
தொன் றிரண்டில். 89

அருந்தவ விலக்கிவ் வுடற்பரிப் பதுதா னச்
சமா திகடரு மூலர், திருந்துநஞ் சிந்தை சிவன்
கணே யாவர் வரினுமென் றமையிற்பே திப்பான்,
பொருந்தினும் வானோ ரெதிர்முதிர் கொலைவெம்
பூதமா தியவளைந் திடினு, மிருந்ததஞ் சமாதி
நிலைகுலை யாதோ ரெண்ணிய வெண்ணியாங்
கடைவர். 90

தேவர்மா முநிவ ரசுரர்வா ளரக்கர் சித்தர்
வித் தியாதரர் முதலோர், யாவரும் விரும்பிச்
சித்திபுத் திகளு மெட்டுணை யச்சமா தியவுண்,
மேவுறு தகற்றித் தவம்புரிந் தடைந்தான் மேல
தா மூலபண் டார, மோவற வவையே குடிகொ
ளென் போனெஞ் சுடையரா வடையவும் படுமே.

ஒருவனுக் கிருளற் றுரியசிற் சொரூப முள்
ளவா விளங்கினன் றறும்ப், பருவா லுருவப் பற்
றுமற் றதுநேர் படுமள விறைபுரி தருமைங், கரும
மெவ் விடத்துங் கண்டுதற் செயலைக் கைவிடுத்
தச்சமா தியவுண், மருவுறு தகற்றித் தவஞ்செயல்
வழக்கால் வாழியெங் குரவனீ டூழி. 92

வைராக்ய தீபம் முற்றுப் பெற்றது.

பாயிர முள்படச் செய்யுள் 101.

சர்வஞ் சிந்மயம்.

வைராக்ய தீபம்

முதல் நினைப்புக் கவி 101,
உதாரண நினைப்புக் கவி 77 ஆகக் கவி 178.

பன் னிரு சீர்க் கழி நெடி லடி ஆசிரிய விருத்தம்.

அடலான ஆரபோர் ஆய்தாயி னும்திருவ
துன்னிளப் பொருள்அருந்தி - அரைகற்ப துணை
கயல் உருட்தோன்றி உடல்என்றென் அங்கிகரு
பரணமாகி, இடலாத நத்தினை வந்திடும் புல
னைந்து நலமிலா பிணியினல்வ - இளமையிற் பிணி
பிறந் தவரிநன் றறிபிறப் பிறதீய வசுரர்குருடன்,
அடலான அரிதுஒரு பொருதுன்ப வினைவில்விள
கருபவத் தனிஈதலே - ஆரியசெய் யாநிறந் தரு
பிறப் பெனுவிடய அத்தனொடு தனதகத்த,

மடலான வேண்டிமுது பண்டுகொ இளமையின்
மனையைஇக் கணத்திருந்த - பிறந்தவ இறந்தேமு
ஈங்கிஇல் லறகருப்ப ஞானியஞ் ஞானங்கெடே. 1

ஓதைஆன திரிவிகா ரணமிற வருத்தமொன்
ஆதலால் சிறிஞானியே - ஒழுக்கமே பலன்கள்வே
பிறிவிலா முன்னமே தேர்ந்திடின் அடுத்தயோக,
போதைஆன அண்டமெண் ஐம்புலன துக்கசுக
அரம்பையுள் இருவகைச்சார் - புத்திரர் இரு
வகைப் பற்றிவே ரறமுள்ளில் வெம்புதல் விடத்
தசமயா, தோதைஆன ஒன்றிசா தகவாக்கொ
தூமபாய் படையெடுத் இந்திவெங்கா-சொற்றிதத்
துவவிரை எடுதனித் தந்தைதாய் முதல்தந்தை
தாய்புத்திரர், நோதைஆன பழகினுல் விடுக்குநா
துறந்தவன் பொருளறத் துறந்துபிறிது - நோய்
மரு ளூறும்உயிர் தனக்கினிய தனக்கினி நடுங்காம
தம்மிடத்தே. 2

மதலைஇம் மையின்அறை தலிற்கான்ற
தன்னெஇத் யாதியா அளிமசமா - மறைகளா

இறைகணன் தெய்வவா நீரிடத் திதுகொ஼ங்
கறைஒளித்த, சதலேகா ரியசெப்பி கருடனே
குலவுவது பாரின்அக லாவலஞ்செய் - சற்குரு
ஒப்பிலம லன்அரும் பொறிபகர் மிகமுயன் (று)
உடலாங்குகை, மீதலேஉச் சியபரந் துலபிறப்
பறிஅச்சி னுண்ணின்ற ஞானசாத - மிகுத்திஇவ்
வகைளரிந் தெழுஎய்த தன்னரு குருகோப மிக்க
பெண்ணே, ஒதலேநட நிற்றலிரு நித்திரை உறங்கி
தென் பரஅறவு எண்டிசெவ்வே - உறக்ககரு
விடைபொற்க எங்(கு)அருந் தவபெற்ற தாய்
முதல் சிறந்தகற்பு. 3

அதலேமைப் படுகள்ள தனேவையி தந்தை
இத் தனாஊனே தேனேஉள்ள - அருந்தவ நன்கடம்
இருந்துஎனக் கீதென்றும் தேவர்மா முநி
ஒருவனே.

ஆக விருத்தம் மூன்றே காலுக்கு
நினைவுக் கவி 178.

வைராக்ய தீபம் செய்யுள் 101.

முதற் குறிப்பு அகராதி.

அடுத்தவிச்	16	இருவகைச்சார்	18
அரம்பை	17	இருவகைப்பற்	18
அரிதுபெற்	8	இளமையிற்பிணி	7
அருந்தவம்	37	இளமையின்மனே	12
அருந்தவவி	41	ஈங்கறை	28
அருந்தியகா	4	ஈதலேயற	10
அரும்பொறி	32	உச்சியம்	32
அரையன்	4	உடலிதுற்	7
அறவுநித்	36	உருட்காரங்	6
அறைதவிற்	26	உள்ளது	40
இக்கணத்	13	உறக்கமும்	37
இத்தரை	40	ஊனேயோம்	40
இத்திறன்	27	எங்குளபுனல்	37
இதுநெறி	28	எடுத்துளகுடும்	22
இந்திர	21	எப்பொருள்	3
இம்மையி	26	எய்தவனுற	34

எரிந்தெழு	33	ஞானசாதகன்	33
ஐம்புலனடல்	17	ஞானியஞ்ஞான	14
ஒருவனுக்	42	ஞானியேயெவரும்	16
ஒன்றியபாச	20	தத்துவமுணர	22
கயல்விழி	5	தந்தைதாய்பல	39
கருடனை	30	தந்தைதாய்முத	23
கருப்பமாரு	14	தம்மிடத்தே	25
கருமமொன்	9	தனக்கினியவனும்	25
கற்பழமாகப்	5	தனதகத்தகலா	12
காரியமாக	29	தனித்திருந்	22
கான்றசோ	26	தனைநனி	39
குலவுசெங்	30	தன்னருகுறு	34
சமரமுற்றிடா	27	திரிவிதவுலகத்	14
சற்குருவரு	31	திருவளர்	3
சாதகதசைக்	20	துணையில்பே	5
சிறந்தகற்	38	துறந்தவன்	24
சிறியவர்	15	துன்பவெம்பிற	9
செப்பிருங்கை	29	துன்னியாணவப்	3
சொற்றிடின்	21	தென்பரவை	36

தேர்ந்திடி	16	பொருளறத்	24
தேவர்மா	41	மிகுத்திடு	33
தோன்றிநின்	7	முள்ளில்சில்	19
நடந்துறங்	35	மைப்படு	39
நித்திரைதடை	35	யாதியா	27
நிறந்தருந்	10	யோகசாத	17
நீரிடத்தன்றி	28	வதுவைநா	30
பகர்தரு	32	வருத்தமொன்	15
படையெடு	21	விடத்தகு	19
பவத்தனிப்	10	விடுக்குநர்	23
பாரினட்டாங்கா	31	விடையது	11
பிறந்தவப்	13	வினைப்பிறப்	9
பிறப்பிறப்புடைய	8	வேண்டினு	12
பிறப்பெனு	11	வோற	19
பிறிதுநோய்	24		
பெண்ணைவிட்	35	ஆகச் செய்யுள்	101
பெற்றதாய்	38		